மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஸ்ரீவைகுண்டம்

அ.வ.எண்.18/2021

வாசா.1

தேதி :- 1.11.2021

பெயர் :- மாரிசெல்வம் த/பெ .:- சுடலை

வயது :- 33 தொழில்:-

கிராமம் :- தாலுகா:- ஸ்ரீவைகுண்டம்

1873ம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டம் 10வது பிரிவின் படி 2021 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் தேதி 1 ஆம் நாள் உதவியாளர் அவர்களால் பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்கு மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். வழக்கின் விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியும். நான் தான் வழக்கறிஞருக்கு கூறினேன்.

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:

என்ன பரிகாரம் கேட்டு வழக்கு போட்டுள்ளேன் என்றால் பாகபிரிவினை கேட்டு போட்டுள்ளேன். நாங்கள் 15 பேர் சேர்ந்து வழக்கு போட்டுள்ளோம். வாதிகள் பெயர்கள் எனக்கு தெரியும். வாதிகள் 15 பேரில் மூத்தவர் லெட்சுமியம்மாள். 1வது வாதி லெட்சுமியம்மாளுக்கு வழக்கு விவரம் நன்கு தெரியும் ஆனால் லெட்சுமியம்மாள் நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க வரவில்லை என்றால் சரிதான்.

குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.